2013 ஏப்ரல் 18]

எம்.எல்.டி., 150 எம்.எல்.டி. என்பதைப் போல, அந்தந்தப் பகுதிகளுக்குத் தேவையான 10 எம்.எல்.டி. தண்ணீருக்கும், 25 எம்.எல்.டி. தண்ணீருக்கும், 50 எம்.எல்.டி. தண்ணீருக்கும், கடல்நீரைக் குடிநீராக மாற்றுகின்ற ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதன் அடிப்படையிலே, கடலோரப் பகுதிகளுக்கும் இதுபோன்று குடிநீர் வழங்குவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய ஊராட்சிகளுக்கும், அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுவாக, மக்கள் தொகை கூடுதலாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், 48.45 சதவீதம் மக்கள் தொகை நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்ந்து வந்திருக்கின்றார்கள். அப்படி வருகின்றபோது ஏற்கெனவே இருக்கிற திட்டங்களின் வாயிலாகக் கொடுக்கக்கூடிய குடிதண்ணீர் போதாத காரணத்தால் குடிதண்ணீரை அதிகப்படுத்திக் கொடுப்பதற்காக, புதிய, புதிய திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 255, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

255—

அங்கன்வாடி மையம்

***19045—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியிலுள்ள அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 ஏப்ரல் 18

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி சட்டமன்றத் தொகுதியில் 193 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 35 அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு இணைப்பு பெறப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கிற அரசு கட்டடங்களில் இயங்கும் 27 அங்கன்வாடி மையங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எரிவாயு இணைப்பு, குக்கர், கேஸ் அடுப்பு போன்றவை வழங்கி, சமையல் அறை நவீனப்படுத்தப்பட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 50 மையங்களுக்கு Storage bin வழங்கப்பட்டிருக்கிறது. மீதமிருக்கிற அங்கன்வாடி மையங்களுக்கு Storage bin வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 7 அரசு கட்டடங்களில் உள்ள மையங்களுக்கு மின் இணைப்பும், 49 அரசு கட்டடங்களில் உள்ள மையங்களுக்கு கழிப்பறை வசதியும், 40 அரசு கட்டடங்களில் உள்ள மையங்களுக்கு தண்ணீர் வசதியும், மீதமுள்ள மையங்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தென்காசி தொகுதி, தென்காசி வட்டத்தில் 23 மையங்களும், கீழப்பாவூர் வட்டத்தில் 102 மையங்களும், தென்காசி தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் வட்டத்தில் 65 மையங்களும், தென்காசி தொகுதிக்குட்பட்ட கடையநல்லூர் வட்டத்தில் 8

2013 ஏப்ரல் 18]

மையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றில் 75 சதவீதம் சொந்தக் கட்டடத்திலும், 25 சதவீதம் வாடகைக் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டடத்தில் உள்ள மையங்களில் நவீன வசதிகள் நிறைவாக இல்லை. எனவே, புதியதாகக் கட்டப்பட்டுள்ள நவீன கட்டடங்கள் போன்று, ஏற்கெனவே உள்ள கட்டடங்களில் நவீன வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்த வேண்டும். தென்காசி தொகுதியில் உள்ள குழந்தைகள் மையங்கள் அனைத்தையும் நவீனப்படுத்தும் பணி எப்போது துவங்கி நிறைவு பெறும் என்பதைத் தங்கள்வாயிலாக சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் சார்பாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தென்காசி தொகுதியிலே இருக்கின்ற மையங்களில் என்னென்ன வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை ஏற்கெனவே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், 9 அரசு கட்டடங்களில் பெரிய பழுதும், 11 அரசு கட்டடங்களில் சிறிய பழுதும் சரி செய்வதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள் அமரக்கூடிய நாற்காலிகள், பாய் மற்றும் மின் விசிறிகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த மையங்களில், வசதிகள் குறைவாக இருக்கின்றன என்று குறிப்பிட்டுச் சொன்னால், நம்முடைய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு இந்த மையங்களைத் தேர்வு செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தி, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர்மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.